**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.261/2021**

**Prosecution Witness : 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : தங்கவேலு | Caste | : |
| Father‘s Name | : மணிசேர்வை | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Acused present)

**15.11.2023**

**முதல் விசாரணை**

நான் பெருங்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் மர வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 அருணாதேவியையும் எனக்கு தெரியும். அவர் ஏர்போட்டில் பணி செய்யும் தொத்தன் என்பவரது மனைவி ஆவார். கடந்த 17.02.2014 அன்று மாலை 3.45 மணியளவில் நான் வேலை செய்து விட்டு பெருங்குடி அருகே உள்ள முத்துமாரியம்மன் கோவில் அருகே வந்த போது அ.சா.1 அருணாதேவிக்கும் ஆஜர் எதிரிக்கும் வாய் தகராறு நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆஜர் எதிரி அ.சா.1 ஐ பள்ளமுண்ட பற முண்ட என அசிங்கமாக திட்டினார். நான் இரண்டு பேரையும் சத்தம் போட்டு விலக்கி விட்டேன். அப்போது என்னுடன் விறகு வெட்டும் மலைச்சாமி என்பவரும் இருந்தார். மலைச்சாமி தற்போது இறந்துவிட்டார். பின்பு இருவரும் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் கு.வி. இல்லை**